**ThinaThanthi Published the Inaugural Function of the Awareness Campaign 2022**

# அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பாலின பாகுபாடு விழிப்புணர்வு முகாம்



சிதம்பரம், ஆக 25

அண்ணாமலைப் பல்கலைகழகத்தில் இரண்டு நாட்கள் பாலின பாகுபாடு விழிப்புணர்வு முகாம் நடைப்பெற்றது. விழிப்பபுணர்வு முகாமில் புகார் குழு உறுப்புனர் முனைவர் ஜே.திருமால் வரவேற்றார். துணைவேந்தர் பேராசியர் ஆர்.எம்.கதிரேசன் கம்பராமாயணத்தில் இருந்து தொடங்கி கண்ணதாசனின் வரிகளையும்மேற்கோள்காட்டி பெண்களின்சாதனைக்களைப் ற்றியும் இருபாலரும் ஒருவரை ஒருவர் எவ்வாறு மதிப்பு கொடுக்கவேண்டும் என்பதை பற்றியும் தனது தொடக்க உரையில் கூறினார். புகார் குழுதலைவர் பேராசியர் பா.முல்லை பெண்களின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்து தலைமையுரை ஆற்றினார். சிறப்பு விருந்தினரான ஜெயரீ மதிமாறன் பாலின துன்புறுத்தலில் இருந்து எவ்வாறு மாணவ, மாணவிகள் தங்களை பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்று கலந்துரையாடல் மூலம் எடுத்துரைத்தார் பேராசியர் அங்கயர்கன்னி தனது வாழ்த்துரையை வழங்கி ஆண், பெண் இருபாலரின் பாதுகாப்புபற்றி கூறினார். ஹேமாசித்ரா ஆண், பெண் இரு பாலினத்த வரும் தங்களது சுதந்திரத்தை முறை கேடாகபயன்படுத்த கூடாது என்று தனது உரையில் அறிவுறுத்தினார். பெண்களுக்கு ஏதேனும் தவறு நிகழும் போது அதனை தைரியமாக எதிர்கொள்ள வேண்டும் என்றும் கூறினார். வழக்கறிஞர் கலையரசிராமதாஸ், பாலியல் வன்கொடுமைக்கான காரணங்கள், அதன் அணுகு முறை, வேலை இடங்களில் பெண்களுக்கு நிகழும் நிகழ்வுகள் மற்றும் சட்டங்கள் பற்றி எடுத்துகூறினார். மேலும், முனைவர்.டி.பிராங்லின் சுனில் ஜஸ்டஸ், முனைவர் கே.சிவக்குமார். முனைவர். ரமேஷ் குமார் ஆகியோர் முதுநிலை வியாபார நிர்வாகத் துறையிலிருந்து பொறியியல் மாணவர்களுக்குவிழிப்புணர்வு பற்றிய கருத்துக்களை செயல்பாடுகளில் மூலம் வழங்கினார்கள். முடிவில் குழு உறுப்பினர் பேராசியர் தேன்மொழி நன்றி கூறினார்.